www.Padasalai.Net www.TrbTnpsc.com

வகுப்பு : 8

தேர்வு எண் | | | | | | |

# அரையாண்டுப் பொதுத் தேர்வு - 2023-24

நேரம் : 2.30 மணி]

## தமிழ்

[மொத்த மதிப்பெண்கள் : 100

**I. அனைத்து வினாக்களுக்கும் விடையளி.** 15X1=15

**அ)சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.**

1. இந்த -------- முழுவதும் போற்றும்படி வாழ்வதே சிறந்த வாழ்வு.
   (அ) வையம் (ஆ) வானம் (இ) ஆழி (ஈ) கானகம்
2. ஐந்தாம் உலகத் தமிழ்மாநாடு நடைபெற்ற இடம் --------
   (அ) திருச்சி (ஆ) சென்னை (இ) மதுரை (ஈ) கோவை
3. 'வெங்கரி' என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது ---------
   (அ) வெம் + கரி (ஆ) வெம்மை + கரி (இ) வெண் + கரி (ஈ) வெங் + கரி
4. விகாரப்புணர்ச்சி --------- வகைப்படும்.
   (அ) ஐந்து (ஆ) நான்கு (இ) மூன்று (ஈ) இரண்டு
5. சரியான படர்க்கை ஆண்பால் தொடரைத் தேர்க.
   (அ) அவன் அல்லன் (ஆ) அவர் அல்லர் (இ) அஃது அன்று (ஈ) அவை அல்ல
6. பழங்காலத்தில் விலையைக் கணக்கிட அடிப்படையாக அமைந்தது --------
   (அ) பல் (ஆ) நெல் (இ) உப்பு (ஈ) மிளகு
7. கதிர் + ஈன என்பதனைச் சேர்த்தெழுதக் கிடைக்கும் சொல் ----------
   (அ) கதிரென (ஆ) கதியீன (இ) கதிரீன (ஈ) கதிரின்ன
8. கேட்டார்ப் -------- தகையவாய்க் கேளாரும்.
   வேட்ப மொழிவதாம் ---------
   இத்திருக்குறளில் விடுபட்ட சொற்களின் வரிசையைத் தேர்க.
   (அ) பிணிக்கும், சொல் (ஆ) இன்மை, சொல் (இ) கல்வி, யவர் (ஈ) சொல்லை, விடல்
9. 'கண்ணா வா!' – என்பது -------- த் தொடர்.
   (அ) எழுவாய் (ஆ) விளி (இ) வினைமுற்று (ஈ) வேற்றுமை
10. இன்றைய கல்வி -------- நுழைவதற்குக் கருவியாகக் கொள்ளப்பட்டு வருகிறது.
    (அ) வீட்டில் (ஆ)காட்டில் (இ) பள்ளியில் (ஈ) தொழிலில்
11. கீழ்க்காணும் சொற்களில் பெயரெச்சம் ---------
    (அ) படித்து (ஆ) எழுதி (இ) வந்து (ஈ) பார்த்த
12. சரியான மரபுச் சொல்லைத் தேர்ந்தெடுக்க.
    கோழி --------
    (அ) கொக்கரிக்கும் (ஆ) கூவும் (இ) அகவும் (ஈ) பேசும்
13. ஆ! புலி வருகிறது! இத்தொடரின் வகையைத் தேர்க.
    அ) செய்தித் தொடர் ஆ) வினாத் தொடர் இ) விழைவுத் தொடர் ஈ) உணர்ச்சித் தொடர்
14. *'பண்ணின்தமிழ் இசைபாடலின் படிவெய்முடிவு அதிரக்*
    *கண்ணின்ஒளி கனகச்சுனை வயிரம்அவை சொரிய'*
    இச்செய்யுள் அடிகளில் இடம்பெற்றுள்ள எதுகைச் சொற்கள்.
    அ) பண்ணின், கண்ணின் ஆ) தமிழ், முழவு
    இ) வயிரம், சொரிய ஈ) ஒளி, சுனை
15. தமிழ் எழுத்துச் சீர்திருத்தப் பணியில் ஈடுபட்டவர் ---------
    அ) பாரதிதாசன் ஆ) தந்தை பெரியார் இ) வ.உ. சிதம்பரனார் ஈ) பெருஞ்சித்திரனார்

**II. எவையேனும் ஆறு வினாக்களுக்கு மட்டும் விடையளி.** 6X2=12

16. மூவேந்தர்களின் காலம் குறித்து எழுதுக.
17. கலிங்க வீரர்கள் எவ்வாறு அஞ்சி ஓடினர்?
18. வீரமாமுனிவர் மேற்கொண்ட எழுத்துச் சீர்திருத்தங்களில் எவையேனும் இரண்டனை எழுதுக.
19. சான்றோர்க்கு அழகாவது எது?
20. பகைவர்களிடம் நாம் நடந்துகொள்ள வேண்டிய முறை யாது?
21. எவற்றையெல்லாம் கைவினைக் கலைகள் எனக் கூறுகிறோம்?
22. பயிர்கள் வாட்டமின்றிக் கிளைத்து வளரத் தேவையானது யாது?



Kindly send me your answer keys to us - padasalai.net@gmail.com

23.இருண்ட ஆட்சி என எதனை மீரா குறிப்பிடுகிறார்?

III.எவையேனும் நான்கு வினாக்களுக்கு மட்டும் விடையளி. 4X2=8

24.வேற்றுமைகளில் வல்லினம் மிகும் இடங்களில் இரண்டினை எழுதுக.

25.மரக்கட்டில் – இச்சொல்லைப் பிரித்து எழுதிப் புணர்ச்சியை விளக்குக.

26.உடனிகழ்ச்சிப் பொருள் என்றால் என்ன?

27.'அழகிய மரம்' – எச்சவகையை விளக்குக.

28.தெரிநிலை வினைமுற்று எவற்றைக் காட்டும்?

29.கலை சார்ந்து உங்கள் பொறுப்புகளுள் இரண்டினை எழுதுக.

IV. அடிபிறழாமல் எழுதுக. 4+2=6

30."ஒருவர் எனத் தொடங்கி என நடுங்கியே" என முடியும் கலிங்கத்துப்பரணி பாடல்.

31."விலங்கொடு" எனத் தொடங்கும் திருக்குறள்.

V. எவையேனும் நான்கு வினாக்களுக்கு விடையளிக்கவும் 4x4=16

32.தொகைநிலைத் தொடர்கள் எத்தனை வகைப்படும்? அவையாவை?

33.கோணக்காற்றால் வீடுகளுக்கு ஏற்பட்ட பாதிப்புகள் யாவை?

34.பள்ளிக் குழந்தைகளுக்கு மருத்துவர் கூறும் அறிவுரைகள் யாவை?

35.ழகர, லகர, ளகர மெய்களின் முயற்சிப் பிறப்பு பற்றி எழுதுக.

36.மழையின்மையால் செடிகள் வாடிய நிலையை விளக்குக.

37.தமிழ்மொழியின் வளர்ச்சிக்காக எம்.ஜி.ஆர் ஆற்றிய பணிகள் யாவை?

VI.விரிவான விடையளிக்கவும்: 2x6=12

38.அ) ஒரு நாட்டின் பாதுகாப்பிற்குத் தேவையானவை எவை எனக் கருதுகிறீர்கள்?

(அல்லது)

ஆ) திரு.வி.க குறிப்பிடும் பல்துறைக் கல்வியில் நீங்கள் எதனைக் கற்க விரும்புகிறீர்கள்?

39.அ) கொங்குநாட்டின் உள்நாட்டு, வெளிநாட்டு வணிகம் குறித்து எழுதுக.

(அல்லது)

ஆ) தாய்மண் மீதான செவ்விந்தியர்களின் பற்றுக் குறித்துச் சியாட்டல் கூறுவனவற்றைத் தொகுத்து எழுதுக.

VII.விரிவாக விடையளிக்கவும்: 1x8=8

40.அ) 'காலம் உடன் வரும்' கதையைச் சுருக்கி எழுதுக.

(அல்லது)

ஆ) 'வெட்டுக்கிளியும் சருகுமானும்', கதையைச் சுருக்கி எழுதுக.

VIII.கட்டுரை எழுதுக. 1x8=8

41. அ) நான் விரும்பும் கவிஞர்

(அல்லது)

ஆ) நாட்டின் வளர்ச்சியில் இளைஞர்களின் பங்கு.

IX.கடிதம் எழுதுக. 1x8=8

42.அ) இருப்பிடச்சான்று வேண்டி வட்டாட்சியருக்கு விண்ணப்பம் எழுதுக.

(அல்லது)

ஆ) விளையாட்டுப் போட்டியில் வெற்றி பெற்ற உங்கள் நண்பனுக்குப் பாராட்டுக் கடிதம் எழுதுக.

X. அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும். 7x1=7

43.சரியான எதிர்மறைச் சொற்களைக் கொண்டு நிரப்புக.

தாங்கள் படிக்க வேண்டிய புத்தகங்கள் இவை -------- (அல்ல / அன்று)

44.பின்வரும் மரபுத்தொடரின் பொருளை எழுதுக.

கொடிகட்டிப் பறத்தல்

45.கோடிட்ட இடத்தைப் பொருத்தமான சொல்லுருபு இட்டு நிரப்புக.

அருவி மலையில் -------- (இருந்து / ஆக) வீழ்ந்தது.

46.உரிய இடங்களில் நிறுத்தற்குறியிட்டு எழுதுக.

திரு வி க எழுதிய பெண்ணின் பெருமை என்னும் நூல் புகழ்பெற்றது

47.கலைச்சொல் எழுதுக. Gene

48.வினைமுற்றுக்கு உரிய வேர்ச் சொல்லை எழுதுக.

வாழிய

49.பொருத்தமான பன்மை விகுதியைச் சேர்த்தெழுதுக.

வாழ்த்து



Kindly send me your answer keys to us - padasalai.net@gmail.com